1970 மார்ச் 13]

தொந்தரவு கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்த நோயை ஒழிப்பதற்காக அங்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதியைப் பெருக்குவதற்காக அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலில் டீ.டீ.டி. தெளிப்பதன்மூலம் இது தடுக்கப்படுகிறது. நீரை ஓரளவிற்குத் தூய்மைப்படுத்தித் தருகிற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் தருவதன்மூலம் இதை அறவே ஒழிக்கமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கான திட்டங்கள் போடப்பட்டு வருகின்றன. உடையார்பாளையம் தாலுகாவைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்ற தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

சடையம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி.

* 351 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள சடையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடம் கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

(இ) எப்பொழுது கட்டப்பெறும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இதற்கான திட்டம் இப்பொழுது இல்லை. இந்தப் பள்ளிக்கு அதிகக் கட்டடங்களுக்கான அவசியத்தை ஆராயும்படி பள்ளி கல்வித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவர் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பார்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் வட்டத்திலுள்ள சடையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி பல ஆண்டுகளாக கட்டட வாய்ப்பு இல்லாதிருப்பதால் மாணவர்களின் நலனைக் கருதி விரைவில் கட்டட வாய்ப்பு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு பள்ளிக்கூடங்கள் இப்படி கட்டட வசதியில்லாமல் இருந்து வருகின்றன. இந்தக் குறிப்பிட்ட பள்ளியின் வரைவுத் திட்டம் இயக்குநரிடமிருந்து வரவில்லை. இயக்குநரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆராய்ந்து நிலைமையை அறிந்து அதற்கேற்றபடி வரைவுத் திட்டத்தை அனுப்புவார்களானால் அது கவனிக்கப்படும். இப்போது இயக்குநர் அவர்கள் அளவில் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.